2018 ஜூன் 5]

124—

கலைக் கல்லூரிக்குக் கட்டடம்

***7198—திரு. எ. ராமர்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, குளித்தலை ஒன்றியம், அய்யர்மலையிலுள்ள கலைக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குளித்தலை தொகுதி, குளித்தலை ஒன்றியம், அய்யர்மலையிலுள்ள கலைக் கல்லூரிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியிலே தமிழகத்தில் இன்றைக்கு உயர் கல்வித் துறையில் நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான ஆட்சியில் 2017–2018 ஆம் கல்வியாண்டில் 16 புதிய வகுப்பறைகள் மற்றும் 3 ஆய்வகங்கள் கட்டுவதற்கு ரூ.3 கோடியே 56 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 27–1–2007 ஆம் ஆண்டில் கிராமப்புற ஏழை, எளிய மாணவர்கள் உயர் கல்வி பயிலுவதற்காக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் பொற்கரங்களால் குளித்தலை தொகுதி, அய்யர்மலையில் தலைவர்*

[2018 ஜூன் 5

கலைஞர் அரசால் கலைக் கல்லூரி தொடங்கிவைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றது. இந்தக் கல்லூரியில் 23 பாடப் பிரிவுகளில் 1,900 மாணவ, மாணவிகள் பயின்றுவருகிறார்கள். 53 வகுப்பறைகள் தேவைப்படும் இந்தக் கல்லூரியில், ஏற்கெனவே 14 வகுப்பறைகள் உள்ளன. தற்போது 16 வகுப்பறைகளுக்கான கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், அந்த மாணவர்கள் கல்வி பயில 23 வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. 1,900 மாணவ, மாணவிகள் பயிலும் இந்தக் கல்லூரியில் 25 கணினிகள் மட்டுமே உள்ளன. அம்மாணவர்கள் பயில மேலும் 50 கணினிகளை வழங்கிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கல்லூரி மாணவ, மாணவிகள் தங்கிப் படிப்பதற்கு விடுதிகள் இல்லாத சூழ்நிலை உள்ளது. எனவே, புதிய விடுதியும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்லூரி நூலக வசதி இல்லாமல் செயல்பட்டு வருகிறது. புதிய நூலகமும், 3 ஆய்வுக் கூடங்களும் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழாவைக் குறிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாக் கட்டடம் என்று அழைக்கப்படக்கூடிய வகையில் 68 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ரூ.210 கோடி செலவில் 862 வகுப்பறைகள், 172 ஆய்வகங்கள் கட்டுவதற்கு ஒட்டுமொத்தமாக நிதி ஒதுக்கீடு செய்ததன் அடிப்படையில், இன்றைக்கு அந்தக் கல்லூரிக்கு 16 வகுப்பறைகள், 3 ஆய்வகங்கள் கட்டுவதற்கு ரூ.3 கோடியே 56 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தக் கல்லூரி 23 பாடப் பிரிவுகளுடன் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டினார்.*

2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அந்தக் கல்லூரி 2011 ஆம் ஆண்டு வரை 5 பாடப் பிரிவுகளுடன் மட்டுமே செயல்பட்டுக்கொண்டிருந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்

2018 ஜூன் 5]

தலைவி அம்மா அவர்கள் கிராமப்புறங்களில் இருக்கின்ற அத்தனை மாணவர்களும் உயர் கல்வி பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு 961 புதிய பாடப் பிரிவுகளை அந்தக் காலக்கட்டத்தில் வழங்கினார். அந்தப் பகுதிக்கு புதியதாக 5 இளநிலைப் பாடப் பிரிவுகளை வழங்கினார். அந்தப் பெருமை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல, 5 முதுநிலை பாடப் பிரிவுகள், 3 M.Phil. *பாடப் பிரிவுகள் மற்றும் 1* Ph.D. *பாடப் பிரிவும் வழங்கினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியிலே நடக்கக்கூடிய மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அதே கல்லூரிக்கு 2017–2018 ஆம் கல்வியாண்டில் 2 இளநிலை பாடப் பிரிவுகளும், 1 முதுநிலைப் பாடப் பிரிவும் மற்றும் 1* Ph.D. *பாடப் பிரிவு என புதியதாக 5 பாடப் பிரிவுகளை வழங்கியதோடு மட்டுமல்லாமல், 16 ஆசிரியர் பணியிடங்களையும் இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள். அந்த வகையில் பார்க்கின்றபொழுது, கிராமப்புறத்தில் இருக்கின்ற அத்தனை மாணவர்களுமே தேவைப்படுகின்ற பாடப் பிரிவுகளைப் படிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, புதிய பாடப் பிரிவுகளை வழங்கியும் வரக்கூடிய காலகட்டங்களில் இன்னும் தேவைப்படுகின்ற கட்டடங்களையும் வழங்குவதற்கு இந்த அரசு முனைப்போடு செயல்படும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி அமர்கின்றேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரி போதிய ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் இல்லாமலேயே 10 ஆண்டு காலமாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, மாணவ, மாணவிகள் திறம்பட படிப்பதற்கு 25 ஆசிரியர் பணியிடங்களையும், வாட்ச்மேன், நூலகர் பணியிடங்களையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்லூரி நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு கலையரங்கமும், கல்லூரியை பாதுகாக்க சுற்றுச் சுவர், மாணவர்கள், ஆசிரியர்கள் தங்களது வாகனத்தை நிறுத்துவதற்கு மிதிவண்டி நிழற்குடை ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தக் கல்லூரியில்* M.Phil. *கணிதம், இயற்பியல், ஆங்கிலம்,* Ph.D. *கணிதம்,* M.Com. *பாடப் பிரிவுகளை இந்த ஆண்டே தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிக்கு போதிய வகுப்பறைக் கட்டடங்கள் இல்லாத காரணத்தால், கல்லூரி, காலை 9–00 மணி முதல் 1–00 மணி வரையிலும் மற்றும் பிற்பகல் 1–00 மணி முதல் மாலை 5–00 மணி வரையிலும் என்று இரண்டு ஷிஃப்ட்களாக நடைபெற்று வருகிறது. அதனால் கிராமப்புற மாணவர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு கல்லூரிக்கு வருவதற்கு சிரமப்படுகிறார்கள். ஆகையால் போதிய வகுப்பறைக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கல்லூரியிலே ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ஒப்பளிக்கப்பட்ட ஆசிரியர் பணியிடங்களில் 34 ஆசிரியர்கள் இப்போது நிரந்தரமாக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மீதமிருக்கின்ற ஆசிரியர் பணியிடங்களுக்காக, ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் பார்க்கின்றபோது சுழற்சி–1 முறையிலே கௌரவ விரிவுரையாளர்கள் 1,883 பேர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேபோல சுழற்சி–2 முறையில் 1,661 கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதன் வாயிலாக அதைப் பூர்த்தி செய்து, மாணவர்களுக்குத் தேவையான கல்வியறிவை நல்லமுறையிலே அரசானது வழங்கிக்கொண்டிருக்கிறது. வரக்கூடிய காலங்களிலே T.R.B. மூலமாக நிரந்தர ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான உத்தரவை அரசு பிறப்பித்திருக்கிறது. காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களில் T.R.B. மூலமாக நிரந்தர ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுவார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேவேளையில் இப்போது தேவைப்படுகின்ற அளவிற்கு மாணவர்களுக்கு கௌரவ விரிவுரையாளர்களை நியமனம் செய்வதற்கு அரசு அனுமதி அளித்து, அதன்மூலம் நல்லமுறையிலே பாடம் கற்பிக்கப்பட்டு வருகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேவேளையில், பாராளுமன்ற

2018 ஜூன் 5]

உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் மூலமாக ஆறு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாய் செலவில் அங்கே R.O. Plant அமைக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அங்கே மூன்று இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டு மிதிவண்டி நிறுத்தம் கட்டப்பட்டிருக்கிறது. உயர் கல்வித் துறை மானியக் கோரிக்கையின்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்பிலே, அந்தக் கல்லூரிக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்தமாக அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே சுற்றுச் சுவர் கட்டுவதற்காக மற்றும் அடிப்படை வசதிகளுக்கு எவ்வளவு நிதி தேவை என்பது கணக்கிடப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் அதற்குண்டான நிதியை வழங்கியிருக்கிறார்கள் என்பதையும் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேவேளையில் அங்கே இப்போது ஆசிரியரல்லாத பணியிடங்கள் 9 வழங்கப்பட்டிருக்கின்றன. அதிலே 7 இடங்களில் பணியாளர்கள் பணிசெய்து கொண்டிருக்கிறார்கள். 2 இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த 2 இடங்களையும் பூர்த்தி செய்வதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 125, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

125—

கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***16602—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, காட்டுமன்னார்கோவில் கால்நடை மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை அரங்கம் அமைக்கவும் மற்றும் மருத்துவமனையைத் தரம் உயர்த்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?